**<u>நான் ராஜாதி ராஜாவின் பிள்ளை</u>**

வாக்குத்தத்தம் என்மேல நிரம்பியிருக்குது
என் இரத்ததுல அபிஷேகம் கலந்து இருக்குது.
நாடி நரம்பெல்லாம் கிருபைகள் மறைந்திருக்குது
என் தலைமுறைய தரிசனம் சுமந்திருக்குது

நான் ராஜாதி ராஜாவின் பிள்ளை
இனி யாருக்கும் அடிமை இல்ல
நான் ராஜாதி ராஜாவின் பிள்ளை
இனி எதற்கும் பயமே இல்ல.

குழியில போட்டாலும் பழிய போட்டாலும்
வழியாய் மாற்றிடுவார்.
எரிகா வந்தாலும் யோர்தான் நின்றாலும்
சொன்னதை நிறைவேற்றுவார்.

தடுமாறி நடந்தாலும் தவறியே விழுந்தாலும்
தாங்கியே பிடித்திடுவார்
கிருபைகள் விலாகாது அபிஷேகம் குறையாது
குறித்ததை நிறைவேற்றுவார்.